# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1861 - 2014 මැයි මස 02 වැනි සිකුරාදා - 2014.05.02

*1861 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 595 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, மே மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மே மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை

(இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு)

### தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2014

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமுமிருந்தும் 2014 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான ஆகக்குறைந்த தகைமைகள் :-

1. (அ) **வயது**.- 2014.03.31 ஆந் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வி**.- (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் (போதனா மொழி), கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) மின்சாரவியல்/இலத்திரனியல்/இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/ மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினைப் பெற்ற சான்றிதழுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ்/ சிங்களம் (போதனா மொழி), கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் அல்லது இரண்டு அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- தேசிய தொழில் பயிலுனர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினைப் பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

2. **பயிற்சிப் போதனைகள்**.- சிங்களத்தில் எல்லாப் பாடநெறிகளும் தமிழில் மோட்டார் இயந்திரவியல் பாடநெறியும் நடத்தப்படும்.

3. **நுழைவுத் தேர்வு**.- தேவையான தகைமைகளையுடைய, கீழே 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரிகள் மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**பரீட்சை நிலையம்**.- அனுமதிக்கான எழுத்துமூலப் பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், வவுனியா ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். (போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டு அருகிலுள்ள வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர்.)

**எழுத்துமூலப் பரீட்சை**.- கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட 02 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

4. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் 400 ரூபாவை ஏதாவதோர் இலங்கை வங்கிக் கிளையில், கணக்கு இலக்கம் 681490, மொரட்டுவைக் கிளைக்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அழிந்துபோன அல்லது வேறு மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேற்கூறிய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப் படமாட்டாது என்பதை விசேடமாகக் கவனத்திற்கொள்க.

5. **ஆரம்ப தேர்வு முறை**.- எழுத்து மூலப்பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (இவ்வெட்டுப்புள்ளி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

6. **இறுதித் தேர்வு முறை**.- நேர்முகப் பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறை பரீட்சையில் 40% உம் நேர்முக பரீட்சையில் 60% உம் புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும். பயிற்சிக்கு தெரிவுசெய்யப் படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

7. **பயிற்சி நெறி** :

| | |
|---|---|
| மோட்டார் இயந்திரவியல் | - 4 ஆண்டுகள் |
| மில்றைற்/வார்ப்பியல் | - 4 ஆண்டுகள் |
| காற்று பதனமாக்கல்/குளிரூட்டல் | - 3 1/2 ஆண்டுகள் |
| வலு மின்சாரவியல் | - 3 1/2 ஆண்டுகள் |
| ஆயுத இயந்திரவியல் | - 3 1/2 ஆண்டுகள் |
| வாகன மின்சாரவியல் | - 3 ஆண்டுகள் |
| டீசல் இயந்திரவியல் | - 3 ஆண்டுகள் |
| உருக்கியிணைத்தல் | - 3 ஆண்டுகள் |
| வாகன உடல் திருத்தலும் வர்ணம் தீட்டுதலும் (பொரளை கிளையில்) | - 3 ஆண்டுகள் |

முதலாம் வருடம் நடத்தப்படும் அடிப்படை பயற்சியின் முடிவில் நடைபெறும் தொழிற்றுறை தேர்வு பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளையும், ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டே உமக்கான தொழிற்றுறை தெரிவுசெய்யப்படும்.

8. **பிணை முறி கைச்சாத்திடல்**.- 4, 3 1/2, 3 வருட பயிற்சிக்கு தெரிவுசெய்யப்படுவோர் இ. ஜே. தொ. ப. நிறுவகத்துடனும் தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையுடனும், பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். அத்துடன் பயிற்சியின் பின்னர் கேட்டுக் கொள்ளப்பட்டால் இலங்கை போக்குவரத்து சபையில் குறைந்தது இரண்டு வருடங்கள் பணியாற்றுவேனெனவும் பிணைமுறி ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

9. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப (ஏ4) அளவில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு அதனுடன்-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுனர்களை சேர்த்தல் 2014'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(விண்ணப்பப்படிவங்களை www.cgtti.lk என்னும் இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.)

10. **விண்ணப்ப முடிவுத் திகதி**.- விண்ணப்பங்கள் 2014.06.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாகக் ''முகாமையாளர், மனித வளமும் நிர்வாகமும்'' அவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **பரீட்சை அனுமதிப்பத்திரம்**.- தகைமையுள்ள பரீட்சார்த்திகளுக்கு 2014.08.09 ஆந் திகதியளவில் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப்பெறாதோர் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்க.

முகாமையாளர், மனித வளமும் நிர்வாகமும்.
இலங்கை - ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி,
கல்கிசை.
தொலைபேசி இல. : 011-2605625.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை**

*தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2014*

1. (அ) முழுப் பெயர் (தமிழில்) :-----.

   (ஆ) முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.

   (இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

2. (அ) அஞ்சல் முகவரி (ஆங்கிலத்தில்) :-----.

   (ஆ) மாவட்டம் :-----.

   (இ) மாகாணம் :-----.

3. (அ) பிறந்த திகதி :-----.

   (ஆ) 2014.03.31 ஆந் திகதியன்று வயது :-
   வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

   (இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

   (ஈ) தொலைபேசி இலக்கம் :-----.

4. பால் (ஆண்/பெண்) :-----.

5. கல்வித் தகைமைகள் :-
க. பொ. த. (சா. த.) பரீட்சை :
முதலாவது அமர்வு :
சுட்டெண் :-----.
ஆண்டு :-----.

| | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| (1) | ...................................................... | ........................ |
| (2) | ...................................................... | ........................ |
| (3) | ...................................................... | ........................ |
| (4) | ...................................................... | ........................ |
| (5) | ...................................................... | ........................ |
| (6) | ...................................................... | ........................ |
| (7) | ...................................................... | ........................ |
| (8) | ...................................................... | ........................ |

இரண்டாவது அமர்வில் பெற்ற பெறுபேறு (புத்தாக்குநர் ஆணைக்குழு சான்றிதழ் பெற்றவர்கள் மட்டும்) :
சுட்டெண் :-----.
ஆண்டு :-----.

| | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| (1) | ...................................................... | ........................ |
| (2) | ...................................................... | ........................ |
| (3) | ...................................................... | ........................ |
| (4) | ...................................................... | ........................ |
| (5) | ...................................................... | ........................ |
| (6) | ...................................................... | ........................ |
| (7) | ...................................................... | ........................ |
| (8) | ...................................................... | ........................ |

6. இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள துறை :-----.

7. (அ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி :-----.
   (ஆ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நிலையம் :-----.
   (கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், வவுனியா)

8. பணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளையின் பெயர் :-----.
(ரூபா 400 பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி இணைக்கப் படல் வேண்டும்.)

என்னால் வழங்கப்பட்ட மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இந்த விபரங்களில் ஏதாவது பொய்யானவை என தெரிவின்முன்போ அல்லது பின்போ கண்டுபிடிக்கப்பட்டால் தகைமையற்றவனாக்கப்படவோ அல்லது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவதற்கோ ஏதுவாவேன் என்பதையும் அறிவேன்.

......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

5-02

## நீர்ப்பாசனத் திணைக்களத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் (தரம் III) இற்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **விண்ணப்பங்கள்**.- இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கிணங்க A4 அளவிலான (21x29 செ.மீ.) கடதாசியில் இரண்டு பக்கத்தையும் உபயோகித்து விண்ணப்பதாரியினால் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தின் தொடரிலக்கம் 1.0 இலிருந்து 4.0 வரை முதலாவது பக்கத்திலும் 5.0 இலிருந்து 7.0 வரை இரண்டாம் பக்கத்திலும் மீதியை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரித்து அதற்குரிய தகவல்களை தனது கை எழுத்தினாலேயே தெளிவாக குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தின் படி அமையாத விண்ணப்பங்கள், முழுமையாக தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் போட்டோப் பிரதி ஒன்று தம் வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும். மேலும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைத் தயாரிக்கும் போது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் பத்திரங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அத்தியவசியமாகும். விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றும் மொழியிலேயே பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014.05.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு 'நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம், 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் :-

(அ) விண்ணப்பங்களை அனுப்பும் போது 'களஞ்சியப் பொறுப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2014' என விண்ணப்பத்தை அனுப்பும் தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள / நிறுவனத் தலைவரினூடாக உரிய தினத்திற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் கிடைத்ததாக அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பம் அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட வேறு ஆவணங்கள் தபாலில் தொலைந்ததாக அல்லது தாமதமாகியது பற்றி செய்யப்படும் எவ்வித முறைப்பாடும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஈ) மாதிரி விண்ணப்பத்தின்படி அமையாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் அல்லது தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

3. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- பரீட்சை நிலையத்தின் பொறுப்பதிகாரி திருப்தியடையுமாறு அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சை நிலையத்தில் தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஏதாவது ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

4. **தவறான தகவல்கள்**.- விண்ணப்பங்களை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். விண்ணப்பதாரி எவராயினும் தகைமை இல்லை என்பது பரீட்சைக்கு முன்னர் தெரியவந்தால், பரீட்சை இடம்பெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் ஏதாவது சந்தர்ப்பத்தில் தெரியவந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியால் வழங்கப்படும் தகவல்கள் எப்பொழுதாவது பொய் என தெரியவரும் பட்சத்தில் அவர் அரச சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவார்.

5. **இப்பதவிக்கு ஏற்புடைய வேதன அளவுத்திட்டம்**.- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (IV) இற்கு இணங்க MN1 – 2006 (A) ரூ 13,120-10 x 145-11 x 170-10 x 240-10 x 320-22,040 ஆவதுடன் சம்பளமானது இச்சுற்றறிக்கையின் விதிமுறைகளுக் கிணங்கவே ஆகும். பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் நான்காவது சம்பள உயர்வுக்குச் செல்ல முன்னர் திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

6. **வயதெல்லை**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்த நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. மேலும், விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். இப்பதவி மூன்று (03) வருட காலத்திற்கு தகுதிகாண் நிலைக்கு உட்பட்டது.

2009.02.20 ஆம் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் வெளியிடப்பட்ட 1589/30 ஆம் இலக்க நியமனம் சம்பந்தமான நடைமுறை விதிகளுக்கு ஏற்புடையதாகும்.

(ii) அரச நிருவாக சுற்றறிக்கை 7/2007 மற்றும் அதனோ டிணைந்த சுற்றறிக்கைக்கிணங்க உரிய மட்டத்தில் மொழித்திறனை உரிய காலத்திற்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(iii) இப்பதவியின் கடமையானது, சாதாரண அலுவலக களஞ்சியப் பொருட்கள் மற்றும் திணைக்களத்தின் நிர்மாண தளங்கள் மற்றும் திட்டத்திற்குரிய இயந்திர உபகரணங்கள், பொறியியல் மூலப் பொருட்கள் என்பவற்றைப் பொறுப்பாக வைத்திருந்து உரிய முறையில் விநியோகித்தல்.

(iv) திணைக்களத்தின் நிர்மாண வேலைத் தளங்களுடன் தொடர்புடைய காரியாலயங்கள் போக்குவரத்து வசதி குறைந்த தூரப் பிரதேசங்களில் அமைந்துள்ளன. திட்டக் கடமைகள் மற்றும் வெள்ளம் போன்ற அவசர நிலைமைகளில் சேவையின் தேவையைக் கருதி பகல் இரவு சேவை கட்டாயமான தாகும். அவ்வாறான சேவை நிலையங்களாவன அம்பாறை, பொத்துவில், கல்முனை, அக்கரைப்பற்று, பதவிய, இராஜாங்கனைய, ஹுறுலுவெவ, மாப்பாகட, பதுளை, கந்தேகெட்டிய, நவகிரி, நூகம், திஸ்ஸ, வீரகெட்டிய, அம்பாந்தோட்டை, லுனுகம்வெஹர, வெள்ளவாய, பிபிளை, மொனராகலை, பொலனறுவை, கவ்துள்ள, எலஹெர, இங்கினிமிட்டிய, புத்தளம், மூதூர், கந்தளாய், கோமரங் கடவளை, முருங்கன், வவுனியா ஆகிய நீர்ப்பாசன பிரிவுகளும் மற்றும் திட்டக் காரியாலயங்களுமாகும்.

*8.* ***கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.***- (i) *கல்வித் தகைமைகள் :-*

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் ஏனைய பாடங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல்

அத்துடன்

(ஆ) க.பொ.த உயர்தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (சாதாரண பொது அறிவுப் பரீட்சை அன்றி)

(ii) பௌதீக தகைமைகள்.- இலங்கைத் தீவின் எந்தப்பகுதியிலும் சேவை செய்யக்கூடியவாறும் பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளக் கூடியவாறும் உடல் மற்றும் உள ரீதியாக பொருத்தமுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) *ஏனைய தகைமைகள் :*

(அ) இலங்கைப் பிஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு அவசியமான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தி இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்படுவது, விண்ணப்பதாரர் உரிய தகைமைகள் மற்றும் குறித்த வயதெல்லை என்பன விண்ணப்பம் கோரப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து தகைமைகளும் பூர்த்தியாக்கப்பட்டிருந்தால் மட்டுமே.

(ஈ) மேலே 8(1) (அ), (ஆ) தகைமைகளுக்கு மேலதிகமாக தகுதிகூர் காலத்தில் கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் களஞ்சியப்படுத்தல் சம்பந்தமான மூன்று (03) மாத பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் இப்பதவியினை நிரந்தரமாக்குவதற்கு தேவையான தகைமை யாகும்.

9. விண்ணப்பதாரரால் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களின் மூலப்பிரதியை தேவையான பொழுது சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக வைத்திருத்தல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ்கள் ;
(3) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நற்சான்றிதழ் பத்திரம் இரண்டு.

10. இந்த ஆட்சேர்ப்பு, திறந்த போட்டிப் பரீட்சை மூலம் இடம்பெறும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையாகும். விண்ணப்பிக்கப்பட்ட மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்ப தாரிகளில், பெற்றுக்கொள்ளப்பட்ட அதிக புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். (இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் கட்டாயமாகும்.)

இப்பரீட்சை 2014 யூலை மாதத்தில் கொழும்பில் மட்டும் நடாத்தப் படும்.

*11.* **தெரிவு செய்யும் முறை.**- *எழுத்துப் பரீட்சை :*

| வினாப்பத்திரம் | புள்ளிகள் | சித்தியெய்தும் புள்ளி | காலம் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 | 01 மணித்தியாலம் |

இது தர்க்கிக்கும் திறமை, சிந்தித்தல், பகுத்தாய்வு செய்யும் இயலுமை, தீர்மானம் எடுக்கும் திறமை போன்றவற்றை பரீட்சிப்பதாக அமையும்.

*12.* **பரீட்சைக்கான அனுமதி.**- பரீட்சை இடம் பெறும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்படும். அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் பரீட்சை மண்டப அதிகாரிக்கு தமது கையொப் பத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை விநியோக்கிக்கப்பட்ட உடனேயே அது பற்றிக் குறிப்பிட்டு செய்தித்தாளில் அறிவித்தல் கொடுக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களின் பின்னரும் அனுமதி அட்டைக் கிடைக்காதவிடத்து அது பற்றி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். நீங்கள் வைத்திருந்த விண்ணப்பத்தின் மற்றும் பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் உறுதிப்படுத்திய போட்டோப் பிரதியும் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச் சீட்டையும் கொழும்பிற்கு வெளிப்பிரதேசமாயின், விண்ணப்பம் அனுப்புவதற்கான பக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தை கேட்பது மிகவும் வினைத்திறனுடையதாக அமையும்.

13. விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை அரசாங்க பாடசாலை யின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு அல்லது அரச சேவையில் உள்ள பதவி நிலை உத்தியோ கத்தர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

14. பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக உள்ள அனைத்து ஒழுங்கு விதிகளுக்கும் விண்ணப்பதாரி கீழ்படிய வேண்டும். இந்த ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து அதற்கான தண்டனைகளுக்கு உள்ளாக வேண்டி ஏற்படும்.

15. இப்பரீட்சையை நடாத்துவது வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் ஏனைய அனைத்து அம்சங்கள் சம்பந்தமாகவும் இறுதி தீர்மானம் எடுக்கும் பொறுப்பு நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்.

**குறிப்பு.**- இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல்களில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின், சிங்கள மொழியிலான அறிவித்தலே ஏற்புடையது என்பதைக் கருத்திற் கொள்க.

(எந்திரி) பத்ரா கமலதாஸ,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
2014, சித்திரை 25.
கொழும்பு 07.

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

***நீர்ப்பாசனத் திணைக்களத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014***

The Open Competitive Examination for the Recruitment to the Post of Store keeper (Grade III) in the Irrigation Department – 2014

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 1
தமிழ் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதா: Perera A.B.C.) :----.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) : ----.

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

1.6 பால் :
பெண் - 1
ஆண் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) :----.

2.3 பரீட்சை அனுமதி பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :-
(i) சிங்களத்தில் / தமிழில்:----.
(ii) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

2.4 தொலைபேசி இலக்கம் :----.

3. வதிவிடம் :

3.1 வதிவிடம் அமைந்துள்ள மாவட்டம் :----.
3.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.

4. 4.1 திருமணமானவரா /திருமணமாகாதவரா :
திருமணமானவர் - 2 திருமணமாகாதவர்- 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

4.2 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

4.3 விண்ணப்ப முடிவு திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4.4 நீங்கள் இலங்கை பிரஜையாவது பிறப்பின் மூலம் /பதிவின் மூலம் :----.

5. கல்வித் தகைமைகள் :
5.1 க.பொ.த (சா/தர) ப் பரீட்சை :
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :
வருடம் :----. மாதம் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

5.2 க.பொ.த (உ./தர) ப் பரீட்சை :
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :
வருடம் :----. மாதம் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

6. நீங்கள் ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்றத்தினால் தண்டனை பெற்றுள்ளீரா? (உரிய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும்) :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

அவ்வாறு தண்டனைப் பெற்றிருப்பின், அது எந்த குற்றத்திற்கு எந்த நீதிமன்றத்தில் தண்டனை பெற்றீர்கள் என்பதைக் குறிப்பிடுக : ----.

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) நான்......................................இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரை உண்மையானதும் சரியானதும் என உறுதி கூறுகின்றேன். இங்கு ஏதாவது ஒரு தகவல் பூரணப்படுத்தப்படாமல் அல்லது

தவறாக பூரணப்படுத்தியிருப்பின் அதனால் ஏற்படக் கூடிய நட்டத்தினை நான் ஏற்றுக் கொள்கிறேன் எனவும் மேலும் இங்குள்ள தகவல்கள் அனைத்தையும் சரியாக பூரணப் படுத்தியுள்ளேன் எனவும் உறுதியுடன் கூறுகின்றேன்.

(ஆ) பரீட்சை இடம் பெறுவது சம்பந்தமாக காணப்படும் அனைத்து ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க செயற்படுவதற்கும் இந்நிபந்தனைகளுக்கிணங்க நான் தகைமையற்றவர் என தெரிய வந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சைக்குப் பின்னராயினும் எனது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு எடுக்கப்படும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன்.

(இ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் நியமனம் பெற்றுக்கொள்ள தகைமையற்றவர் எனவும் நியமனம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் உறுதிப்படுத்தப்பட்டால் எவ்வித நட்டயீடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(ஈ) இங்கு குறிப்பிட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் எனவும் .......................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

9. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
(தற்போது அரச சேவையிலுள்ளவர்களுக்கு மட்டும் உரித்தானது.)

திரு./ திருமதி/ செல்வி, .............................. அவர்கள் ............................... சேவையில் ...................................... பதவியில் உள்ள உத்தியோகத்தர் என்பதையும் அவர் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை ..................................... சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

திகதி :----.

5-266

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2014***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 02.05.2014 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.04.2014 |
| | | வெள்ளி | 09.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.04.2014 |
| | | வெள்ளி | 16.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.05.2014 |
| | | வெள்ளி | 23.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.05.2014 |
| | | வெள்ளி | 30.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.05.2014 |
| **யூன்** | .. | வெள்ளி | 06.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.05.2014 |
| | | வெள்ளி | 13.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.05.2014 |
| | | வெள்ளி | 20.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.06.2014 |
| | | வெள்ளி | 27.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.06.2014 |
| **யூலை** | .. | வெள்ளி | 04.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2014 |
| | | வெள்ளி | 11.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2014 |
| | | வெள்ளி | 18.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2014 |
| | | வெள்ளி | 25.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*